# விளையாட்டு செய்திகள்

# சென்னை லயோலா கல்லூரியில் விளையாட்டு தினம் கொண்டாட்டம்

**சென்னை, ஏப். 2–**

லயோலா கல்லூரியில் நேற்று நடந்த விளையாட்டு தின விழாவில், பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன.

நுங்கம்பாக்கத்தில் உள்ள லயோலா கல்லூரியில், 96ம் ஆண்டு விளையாட்டு தின விழா, கல்லூரி வளாகத்தில் நேற்று கொண்டாடப்பட்டது. இவ்விழாவில், ஆவடி போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் மற்றும் இந்திய அணியின் முன்னாள் கூடைப்பந்து வீரர் சன்னி உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தனர்.

இதில், மாற்றுத் திறனாளி வீரர்களுக்கான, 100 மீட்டர் ஓட்டப் பந்தயம், இரு பாலருக்கான 100 மீட்டர் ஓட்டப் பந்தயம், 1,500 மீட்டர் தொடர் ஓட்டம், வேக நடை உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன.

அதே போல், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன.



■ சென்னை நுங்கம்பாக்கம் லயோலா கல்லூரியில், 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்ற வீரர்கள்.

போட்டிகளில் சிறப்பாக பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு, ஆவடி போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில், கமிஷனர் சந்தீப்ராய் பேசியதாவது:

கல்லூரி விழாவில் பங்கேற்றதில் மிக்க மகிழ்ச்சி. மாணவர்களுக்கிடையே ஏற்றத்தாழ்வு பாகுபாடு இருக்கக் கூடாது. சமுதாயத்தில் குற்றங்கள் நடந்தால், அதை உங்கள் மொபைல் போனில் பதிவு செய்யுங்கள். பின், சம்பந்தப்பட்ட போலீசாரிடம் ஒப்படைக்க வேண்டும். ஒவ்வொரு மாணவருக்குள்ளும், சமூகத்தின் மீது பற்று இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்வில், கல்லூரி முதல்வர் மற்றும் பல்வேறு துறை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.